(2) அமைச்சர் அறிக்கை.

ஒரு துணை வினாவிற்கான விடையைத் திருத்தி மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் விடையாக, கன்னிமாரா லைப்ரரிக்கு டெப்பாசிட்டாக ரூ. 5 வசூலிக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். இப்பொழுது, ரூ. 20 டெப்பாசிட்டாக வசூலிக்கிறார்கள் என்றும், 2 புத்தகங்கள் வழங்குகிறார்கள் என்றும், 14 நாட்கள் வரையில் வைத்துக்கொண்டு திருப்பிக் கொடுக்கலாம் என்றும் விதி இருக்கிறது என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

பேசின் பிரிட்ஜ் அனல்மின்நிலைய ஊழியர் வேலைநிறுத்தமும், மின்உற்பத்திக் குறைப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. எ. ஆர். மாரிமுத்து, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகிய மூவரும்

"the serious situation arising out of fall in the production of electricity in the Basin Bridge Power House due to the strike there and the failure of the Government to resolve the same."

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அவையை ஒத்திவைத்து விவாதிக்கக் கூடிய அளவு முக்கியத்துவம் வாய்ந்ததா என்பதைப்பற்றி மட்டும் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சபாநாயகர் அவர்களே, பேசின் பிரிட்ஜிலே மின்சாரத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்து, பிறகு கைவிடப்பட்டிருக்கிறது. ஆனால், வேலைநிறுத்தத்திற்கான காரணத்தையும், எப்படி அரசின் தவறின் காரணத்தினால் இம்மாதிரி வேலைநிறுத்தம் வருகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மத்திய சர்க்கார் மத்தியிலிருக்கிற சங்கத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, மின்சாரத் தொழிலாளர்களுக்கெல்லாம் இடைக்கால நிவாரணம் 1—10—1973 முதல் ரூ. 30 கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்திருப்பதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அப்படி ஒப்பந்தம் செய்தவுடன் தமிழ்நாட்டு மின்சார சிப்பந்திகளுக்கும் அவர்கள் கேட்டபோது, உடனடியாக அந்த இடைக்கால நிவாரணத்தைக் கொடுத்திருக்கலாம். அப்படிக் கொடுக்காமல் காலதாமதம் பண்ணிய காரணத்தால் பேசின் பிரிட்ஜிலே இந்த வேலைநிறுத்தம் ஆரம்பித்திருக்கிறது. நல்லவேளையாக பேசின் பிரிட்ஜோடு நின்றுவிட்டது. அதற்காக தமிழ்நாட்டிலே உள்ள மற்றவர்கள் நடத்தியிருந்தால் அது நியாயமாகத்தான் இருக்கும்.